

தலைமைச் செயலகத்தில் நேற்று (01.02.2025) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் 2025–2026 ஆம் ஆண்டின் மானிய கோரிக்கையின் போது மேற்கொள்ளப்படவுள்ள புதிய பணிகள் மற்றும் புதிய நீர்த்தேக்கங்கள், தடுப்பணைகள், பாசன கட்டுமானங்களின் மறுசீரமைப்பு, ஏரிகள் தூர்வாருதல், டெல்டா மாவட்டங்கள் மற்றும் இதர மண்டலங்களில் உள்ள பாசன கால்வாய்கள் சிறப்பு தூர்வாருதல் மற்றும் ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட பாசன கட்டுமானங்களை விரைவில் சீரமைத்தல் மற்றும் துறை ரீதியான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், சிறப்பு செயலாளர் எஸ்.ஸ்ரீதரன், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சா. மன்மதன், நீர்வளத்துறை, மண்டல தலைமைப் பொறியாளர்கள், செயலாக்க பிரிவு தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (31.01.2025) திருச்செங்கோடு நகர் புறவழிச்சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

### அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும்

# பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - சீர்மரபினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை!

## உதவி பெறுவதற்கான நிபந்தனைகள் – பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் அறிவிப்பு!

சென்னை, பிப்.2-

பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

அரசு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட (பி.வ), மிகப்பிற்படுத்தப்பட்ட (மி.பி.வ) மற்றும் சீர்மரபினர் (சீ.ம) மாணவ/மாணவியருக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (PM YASASVI Postmatric Scholarship) திட்டம் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை மூலம் வருடந்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் பி.வ/மி.பி.வ/சீ.ம மாணவ/மாணவியருக்கு எவ்வித வருமான வரம்பு நிபந்தனையுமின்றி கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

II. முதுகலை, பாலிடெக்னிக், தொழிற்படிப்பு போன்ற பிற படிப்பு அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் மாணாக்கர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,50,000/க்கு மிகாமல் இருத்தல் வே0ண்டும்.

2) 2024-2025ஆம் கல்வியாண்டில் மேற்படி கல்வி உதவித்தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்கள், University Management Information System (UMIS) (https://umis.tn.gov.in/) என்ற இணையதளம் மூலம் வரவேற்க செயல்பாட்டிற்கு வந்து உள்ளது. கல்வி உதவித்தொகைக்கு, மாணாக்கர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம் எனவும், கல்வி உதவித்தொகை விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 28.02.2025 ஆகும்.

அ) புதுப்பித்தல் மாணாக்கர் :

(Renewal Students i.e. 2nd, 3rd & 4th Year in the year 2024-25)

ஏற்கனவே, கல்லூரியில் கல்வி உதவிதொகை பெற்று 2024-25 ஆம் ஆண்டில் 2, 3 (ம) 4 ஆம் ஆண்டு பயின்று வரும் புதுப்பித்தல் மாணாக்கர்கள், கல்வி உதவித் தொகைக்கு புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அம்மாணாக்கர்களுக்கு கல்லூரிகளில் நடப்பாண்டில் கல்வி பயில்வதை, சம்மந்தப்பட்ட கல்லூரிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

ஆ) புதிய மாணாக்கர் :

(1st year student & the students who are not applied the scholarship during the year 2023-2024)

நடப்பு கல்வியாண்டில் (2024-2025) புதிதாக கல்வி உதவித்தொகை பெற கல்லூரியில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற (ம) சென்ற வருடத்தில் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தவறிய புதிய மாணாக்கர்கள், தற்போது தாங்கள் பயிலும் கல்லூரியில் கல்வி உதவித் தொகைக்கென உள்ள ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) அணுகி, https://umis.tn.gov.in/ என்ற இணையதளத்தின் மூலம் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம். முதல் தலைமுறை பட்டதாரி எனில் அதற்கான சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

3) மேற்படி, விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து, BC, MBC,& DNC வகுப்பை சார்ந்த மாணாக்கர்களை, பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4) கல்வி உதவித் தொகை தொடர்பான சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை, அலுவலக நேரங்களில் அணுகி தொடர்பு கொள்ளலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் - ஆணையர் அறிவித்துள்ளார்.

### இன்று திருச்சிக்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு

# திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !

**திருச்சி, பிப்.2-**

**திருச்சிக்கு இன்று வருகை தரும் கழகத் தலைவருக்கு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (02/02/2025 - ஞாயிற்றுக்கிழமை) சென்னையில் இருந்து விமானம் மூலம் காலை 11 மணி அளவில் திருச்சி வருகை தந்து மணப்பாறையில் நடைபெறும் பாரத சாரண, சாரணியர் இயக்க வைர விழா, ஜாம்புரி தேசிய திரளணி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளார்கள்.

எனவே அவரை வரவேற்க விமான நிலையத்தில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் , மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளரும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில்

# மாவட்ட ஆட்சியர்கள் பணியிட மாற்றம்!

சென்னை, பிப்.2-

தமிழ்நாட்டில் திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஆட்சியர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

தமிழக தொழில்நுட்பக் கல்வி ஆணையராக இன்னசன்ட் திவ்யா நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருவள்ளூர் ஆட்சியராக பிரதாப், திருவாரூர் ஆட்சியராக சிவசௌந்தரவள்ளி, சேலம் பட்டு வளர்ப்பு இயக்குநராக சாந்தி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநராக கண்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். திருவள்ளூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, விழுப்புரம், தருமபுரி மாவட்ட ஆட்சியர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், தருமபுரி மாவட்ட ஆட்சியராக ஐஏஎஸ் அதிகாரி சதீஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராக சரவணன், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியராக தினேஷ் குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியராக ஷேக் அப்துல் ரஹ்மான் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியராக தர்ப்பகராஜ், திருப்பத்தூர் ஆட்சியராக மோகனசந்திரன், நெல்லை மாவட்ட ஆட்சியராக சுகுமார் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் ஆட்சியராக இருந்த பழனி, அறநிலையத் துறை கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். நகராட்சி நிர்வாக இணை ஆணையராக லலித் ஆதித்யா நீலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியராக சதீஷ், தொழிலாளர் நல ஆணையராக ராமன் நியமனம், தமிழக அரசின் பொதுத் துறை இணை ஆணையராக சரயு, தமிழக அரசின் மின் ஆளுமை முகமையின் இணைய தலைமை செயல் அலுவலர் ஸ்ருதன்ஜய் நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிதம்பரம் துணை ஆட்சியராக கிஷண்குமார், எம்டிசி மேலாண் இயக்குநராக பிரபு சங்கர், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை ஆணையர் மற்றும் செயலாளராக தட்சிணாமூர்த்தி, வணிகவரி இணை ஆணையராக பூங்கொடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை செயலராக பிரதீப் யாதவ், துணை முதல்வர் உதயநிதியின் செயலர் பிரதீப் யாதவுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பெண்கள் வேலை வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இயக்குநராக ஆர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கழகத் திட்ட இயக்குநராக பாஸ்கர பாண்டியன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை குமரி தொழில் வழித்தட திட்டத்தின் மேலாண் இயக்குநராக கூடுதல் பொறுப்பும் வகிக்கிறார். தமிழக அரசின் வழிகாட்டி பிரிவு நிர்வாக இயக்குநராக தாரேல் அகமது நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டி பிரிவு நிர்வாக இயக்குநராக தாரேஸ் அகமது நியமிக்கப்பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியராக சதீஷ், பேரிடர் மேலாண்மை ஆணையராக தாமஸ் வைத்தியன், பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலர் மற்றும் ஆணையராக ஜெயா, கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளராக அம்ரித், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சிறப்புச் செயலராக கணேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஆட்சியர் மரு.ச.உமா, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்!

# ஓமலூர் - சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி!

## அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்!

நாமக்கல், பிப்.2-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி, கரட்டுப்பாளையத்தில் ஓமலூர் -சங்ககிரி - திருச்செங் கோடு - பரமத்தி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எம். மதுரா செந்தில், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு ஓமலூர் - சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி சாலையை கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்காக அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

திருச்செங்கோடு என்பது "ஆணும் பெண்ணும் ஒன்றுதான்" என்னும் தத்துவத்தை வெளிப்படுத்தும் ஆன்மீக மண். கலைஞர் அவர்களும் "ஆணுக்கு பெண் நிகர்" என்பதை வலியுறுத்தி சொத்தில் சம உரிமை பெற்றுத் தந்தவர். அமெரிக்க அதிபர் பாராளுமன்றத்தில் பேசும் போது அமெரிக்காவின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றதற்கு முழுமுதற்காரணம் நெடுஞ்சாலை துறை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதே ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில், தமிழ்நாட்டின் சாலைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்றால் தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற இயலும். சாலைகள் வளர்ச்சி பெற்றால் தான் வேளாண் உற்பத்தி பொருளை சந்தைப்படுத்த இயலும். தொழிற்சாலை உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த சாலை வளர்ச்சி என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**பொருளாதார வளர்ச்சிக்கு சாலை வசதி முக்கியம்!**

வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டுமென்றால் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து மூலம் தான் பயணிக்க முடியும். அந்த வகையில் விமானம் மற்றும் போக்குவரத்து வசதியைப் பெற சாலை மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "அமெரிக்க அதிபர் கென்னடி" கூறியது போல், பொருளாதார வளர்ச்சிக்கு சாலை முக்கியம் என்பதன் அடிப்படையில், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மற்றும் தாலுகா தலைமையகங்களை இணைக்கும் முக்கியமான மாநில நெடுஞ்சாலைகள் 2200 கிமீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக விரிவு படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2021-22 ஆம் நிதியாண்டில் 253.62கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டில் 157.10கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் 166.22கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. 2024-25 ஆம் நிதியாண்டில் 254.32கி.மீ சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

**57 பணிகளுக்கு ரூ.154 கோடி நிதி ஒதுக்கீடு!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் நெடுஞ்சாலை துறை சார்பில் 227 பணிகள் 412 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் 57 பணிகளுக்கு ரூ.154 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் கிராம சாலைகள் அழகு சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.67 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய சாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் 37 சாலை பணிகளுக்கு ரூ.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அருள்மிகு நைனாமலை வரதராஜர் திருக்கோவி லுக்கு பக்தர்கள் சென்று வர மண்சாலை அமைக்கப்பட்டு வந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இந்த அறிவிப்பின்படி சாலை அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கொல்லிமலையில் விபத்துகளை குறைக்க ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் முறையில் சிறப்பு தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**தரைமட்ட பாலங்கள் தரம் உயர்த்த உத்தரவு!**

நாமக்கல் புறவழிச் சாலை ரூ.207 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்ற வருகின்றன. அதே போன்று திருச்செங்கோடு புறவழிச் சாலை ரூ.124 கோடி மதிப்பீட்டில் நடைபெற்ற வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள 1281 தரைமட்ட பாலங்களை தரம் உயர்த்த உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 10 தரைமட்ட பாலங்கள் ரூ.29 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

முன்னதாக, திருச்செங்கோடு நகர் புறவழிச் சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், திருச்செங்கோட்டில் நெடுஞ்சாலைத் துறை சார்பில், சாலை ஓரங்களில் மரக்கன்றுகளை நடும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தா. கார்த்திகேயன், ஜி.தங்கவேல், கு.கோ.சத்தியபிரகாஷ், நளினிசுரேஷ்பாபு, இரா.சந்திரசேகர், (க&ப) சி.சசிக்குமார், முருகேசன், கே.ஆர்.திருகுணா உட்பட பல துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கும்பமேளா கூட்ட நெரிசலில்

# உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்தது!

## மேலும் உயரக் கூடும் என அச்சம்!

பிரயாக்ராஜ், பிப்.2-

கும்பமேளாவில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், புனித நீராட கோடிக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். கூட்டம் அதிகரித்ததால் பயங்கர நெரிசல் ஏற்பட்டதில் முதியவர்கள், பெண்கள் உள்ளிட்டோர் மயங்கி கீழே விழுந்தனர். கூட்ட நெரிசலில் 30 பேர் பலியாகினர். 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். பலி, காயமடைந்தவர்கள் குறித்த தகவலை உத்தரப்பிரதேச அரசு மறைக்க முயற்சித்ததாக புகார் எழுந்துள்ளது. இந்நிலையில், கும்பமேளாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்துள்ளது. உத்தரப்பிரதேசத்தில் மட்டும் 14 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்த அன்று மற்றொரு இடத்தில் இரண்டாவது முறையாக கூட்ட நெரிசல் ஏற்பட்டு விபத்து ஏற்பட்டதாக பொது மக்களும், உள்ளூர் ஊடகங்களும் தொடர்ந்து கூறி வருகின்றன. ஆனால் உத்தரபிரதேச அரசு இதுவரை அதனை உறுதி செய்யவில்லை.